ஸ்ரீரஸ்து

ஸ்ரீ ஹஸ்திசைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதாய நம:.

[illegible] நம:.

பெருமாள் கோவில் பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

ரக்ஷாவிமர்சசிக்ஷா.

[illegible]

[illegible]

[illegible]

ந்யாயவிவரணப்ரகரணத்தில் "வர்ணங்கள் இரண்டென்னவொண்ணாது, நாலென்னவேணும்" என்றும், "வர்ணாதிவத்வ்யக்திபேதஸ்த்வப்ரஸஞ்ஜித:| [illegible]" என்றும் அவதரித்துள்ள ஸ்ரீ ஸூக்திகள் விஷயமாகக் கீழே பல நூல்களில் விரிவாக நடந்திருக்கும் [illegible] வஞ்சித மோக்ஷப்ரவ்ருத்திங்களே. அடியேனுடைய ஸதாசார்ய ஸூக்தி ரக்ஷை ஸ்ரீ தேசிக ஸூக்தி வித்தாஞ்ஜநம், தத்வ நிவேதநம், ஸ்ரீ தேசிக ஸூக்தி பரிமளம் என்னும் நூல்களில் இவ்விஷய விசார விரிவுகளை விவேகிகள் கடாக்ஷித்தருளியே யிருப்பர்கள்.

இவற்றுள், ஸதாசார்ய ஸூக்திரக்ஷையின் மீது ரக்ஷா விமர்சம் என்னுமொரு சிறு சுவடி ஸ்ரீ உ. வே. வித்வான் மதுராந்

http://acharya.org

தகம் ஈச்சம்பாடி வீரராகவாசாரியரால் எழுதப்பட்டு ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷணீ பத்ரிகை மூலமாய்த் துளி துளியாக வெளிவந்து இப்போது முடிவு பெற்றிருப்பதனால் இதைப்பற்றி வித்வான்களுக்குச் சிறிது விண்ணப்பஞ் செய்துகொள்ளுகிறேன்.

ஆகூதவிவாதத்தில் இரண்டு விஷயங்கள்:—(1) பிராட்டிக்கு மோக்ஷோபாயத்வம் உண்டா இல்லையா என்பது ஒருவிஷயம்.

(2) “சரணங்கள் இரண்டென்ன வொண்ணாது, நாலென்ன வேணும்” இத்யாதியான ஆச்சான் பிள்ளை ஸ்ரீ ஸூக்தியை தூஷித்தும் பரிஹஸித்தும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலுள்ளனவாகச் சொல்லப்படுகிற சில காரிகைகளும் அவற்றின் வியாக்கியானங்களும் பொருந்துகின்றனவா இல்லையா என்பது மற்றொரு விஷயம்.

இவ்விரண்டு விஷயங்களிலும் ப்ரதி பக்ஷிகள் ஸ்ரீ தேசிக திவ்யஸூக்திவிருத்தமாகவே ஸ்வச்சந்தமாகப் பல எழுதியுள்ளார்களென்பதை ஸாரஸங்க்ஷேபமாக விளக்கிக் காட்டுகின்றேன்.

முதல் விஷயம்; பிராட்டியின் உபாயத்வம்—மோக்ஷமளிக்கும் அதிகாரம் எம்பெருமானுக்கு மாத்திரமா? அல்லது எம்பெருமானுக்குப் போலவே பிராட்டிக்குமா? என்பது விசாரம். அது எம்பெருமானுக்கு மாத்திரமே யென்பது ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் முதலான ஸகலாசார்யர்களுக்கும் ஸம்மதமான திருவுள்ளம். எம்பெருமானுக்குப் போலவே பிராட்டிக்குமுண்டு என்று அவதூராவீரர்கள் பேசினார்கள்.

‘இங்ஙனே பேசுவது ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனுடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளுக்கு மிகவும் முரண்பட்டது’ என்னுமிடத்தை அடியேன் ஸப்ரமாணமாகவும் அவிவாத்யமாகவும் நிரூபித்துக் காட்டி ஸதாசார்ய ஸூக்தி ரக்ஷா க்ரந்தத்தை வெளியிட்ட பின்பு, வேறொரு வழியிலே புக ஆரம்பித்தனர். அதாவது—இந்த உபாயத்வத்தில் வ்யாஜம், அவ்யாஜம், என்று இரண்டு பேதங்களை யிட்டு, எம்பெருமானுக்கு வ்யாஜோபாயத்வமென்றும், பிராட்டிக்கு அவ்யாஜோபாயத்வமென்றும் சொல்லிவிடுகிறோ மென்கிறார்கள். இஃது அழகியதே. அயௌஜிவேயீய தாழ்॥.

உலகில் ஒரே வஸ்துவுக்கு ஒருவன் ஊாவயிதாவாகவும் த்ராதாவாகவும் இருக்கமுடியுமா? என்று விவேகிகள் விமர்சிக்

கவேணும். இருக்க முடியாதென்பதை ஸாமிஸ்ரும் எளிதிலுணர் வார்கள். தன்னாலேயே கொடுக்கக்கூடியதான பொருளாக இருக்குமாகில், அதனைத் தானே கொடுத்துவிடத் தடையிராதன்றோ. புருஷகார க்ருத்யம் செய்து ஊாவநம் பண்ண ஷூஸக்தியே யிராதென்பது திண்ணம்.

பிராட்டி முமுக்ஷுக்களால் புருஷகாரமாக வரிக்கப்படுகிறாள் என்பது உஹயவாஜிஸஂவூதிவஹும். புருஷகாரம் செய்வதாவது என்ன? 'இவனுக்கு இதை நீ அவசியம் அளித்தே தீரவேணும்.' என்று ஷூகீயப்ரியதம்னிடத்தில் மன்றாடிப் பேறு பெறுவிக்கப் பார்க்கையே புருஷகார க்ருத்யமாகும். 'இந்த க்ருத்யம் பிராட்டியினுடையது' என்று நிராவாயமாக இசைந்தான பின்பு அவளுக்கு ஊாவயிதூகூவமே யல்லது ஊாதூகூவமில்லை யென்னுமிடம் கூடவே இசையப்பட்டதாய்த் தேறி நிற்கும். அப்பிராட்டிதனக்கே ஊாதூகூவமும் பல விடங்களில் கணோக்ஷுமாக இருக்குமாகிலும், உலகில் ஊாவயிதாக்களையும் ஊாதாக்களாகவே கொண்டாடிக் கூறும் முறையின்படி அது பொருந்தவற்றே யாகும். 'ஊாவயிதூகூவமன்றிக்கே ஊாதூகூவந் தானே ஸாக்ஷாத்தாக வுண்டு' என்று கூறுவதானல், ஷூயஂஊாதாஂஸக்ஷுரானவர்கள் உடனே தாமே நிரமூவுமாகக் கொடுத்துவிடுகை யன்றிக்கே புருஷகார க்ருத்யத்திலே கைவைத்துப் பரிச்ரமப் படுவது மிகவும் வீணான பணியாகும். ஊாவயிதூகூவ ரூபமான புருஷகாரத்வமும் ஊாதூகூவ ரூபமான உபாயத்வமும் ஒருகாலும் ஸாமாநாயிகரண்யஸஹங்களாகமாட்டா.

புருஷகாரத்வமென்பது ஊாவயிதூகூவமன்று என்று சொல்ல விவேகிகள் முன் வரமாட்டார்கள். "கிஂதநிஷேஊாஷ: கஜஹஜமதீதி கூஂஹிஙெதாவாயெவிஷூாய ஷூஜநயவி" என்று பட்டரும், "ஞூஷ்ராவராயிநி ஜநெவூஹிரகூணாயஂ ரஜெஸூரவூ ரயோ விநிவெஷூஂநெ" என்று ஸ்வாமி தேசிகனும் அருளிய இரண்டு ஸ்ரீ ஸூக்திகளைமாத்திரம் இங்குக் கொள்வோம். [இவ்விஷயத்தில் தேசிக திவ்ய ஸூக்திகளை எவ்வளவு கைப்பற்றினாலும் 'பிராட்டிக்குப் புருஷகார க்ருத்யம் செய்வது தான் பணி' என்றும், 'புருஷகார க்ருத்யம் செய்வதற்காகவே

http://acharya.org

பிராட்டியை வரிப்பது' என்றும் தெளியக் கூறுகின்ற ஸ்ரீஸூக்தி தவிர மற்றைப்படி தெரிவிக்கும் திருவாக்கு ஒன்றுகூடக் காணக் கிடைக்காது; 'ப்ரஹ்மசாரி நாராயணனுக்கன்றிக்கே ஸ்ரீமந் நாராயணனுக்கே (அதாவது, ஸ்ரீவாத்ஸல்யாதிகல்யாணகுணவிஶிஷ்ட நாராயணனுக்கே) உபாயத்வம் கொள்ளவேணும்' என்பதை ஸ்தாபிப்பதில் தேசிக ஸ்ரீஸூக்திகள் பஹுபரிச்ரமம் கொண்டனவத்தனை.] இவற்றால் சேதநர்களுக்குப்பேரின்பத்தை எம்பெருமானால் பெறுவிக்கப் பிராட்டி பாடுபடுகின்றாளென்பது ஸுவ்யக்தமாகிறது. அதனைக் கொடுப்பதற்கு எம்பெருமான் எப்படி ஶக்தனோ அப்படியே பிராட்டியும் ஶக்தையாகவே யிருப்பாளாகில், நிரங்குஶஸ்வதந்த்ரனும் உதாரனும் நிரவதிக ஹேய நிர்வாணனுமான பகவான் பக்கலில் அவள் மன்றாடுவதைவிட்டுவிட்டுத் தானே அளித்து ஆனந்திக்க என்ன இடையூறு? இவளோ சேதநர்பக்கலில் அளவுகடந்த ப்ரேமமுடையவள். இவர்களின் க்லேஶம் பொறுக்க கில்லாதவள். அப்படிப்பட்ட பிராட்டி தன் கையால் தானே தரக்கூடியதைத் தந்தருளாமல் ஏன் பரனிடத்தில் மன்றாடவேணும்?

நநு, உபயஸாதிகமானதொரு பொருளை ஒருத்தன் ஸாதனைத்ரை கொடுத்துவிட முடியாதன்றோ; அதுபோல ப்ரக்ருதத்திலும் மோக்ஷமென்கிற பொருள் ஸ்ரீ ஸ்ரீமதுபயஸாதிகமாதலால், பிராட்டியைவிட்டு எம்பெருமானும் தனியே கொடுக்க அஶக்தன்; எம்பெருமானை விட்டுப் பிராட்டியும் தனியே கொடுக்க அஶக்தை; ஆகவே பிராட்டிக்கும் எம்பெருமானுக்கும் தாத்ருத்வம் நிர்விசேஷமே யாகும். புருஷகார க்ருத்யம் செய்வதனால் பிராட்டிக்கு ஸ்வநிஷ்டதாத்ருத்வஶக்தி வ்யாஹதமாய் விடாது என்கிறோம்—என்னில்,

அத்ருஷ்டவயமயம். 'மோக்ஷமென்னும் பொருள் ஸ்ரீ ஸ்ரீமதுபயஸாதிக'மன்று' என்று யாம் சொல்லவருகின்றிலோம். மாதாபித்ருக்களையும் பதி பத்நிகளையும் த்வயஸாதிகளாகவுடைய பொருள்களில் ஒருவனுக்குத் தான் தாத்ருத்வம் வ்யவஸ்திதமாயிருக்கிறபடியை உலகில் காணாநின்றோம்: "பதிம் விஶ்வஸ்யாத்மேஶ்வரம்" "ந தஸ்யேஶே கஶ்சந" இத்யாதிகளிற்படியே

http://acharya.org

நிருபாதிகஸ்வரூபஶேஷியான எம்பெருமான் தனக்கே உரித்தான பொருள்களைத் தன்னடியார்க்கும் உரித்தாக ஆக்கிவைத்திருப்பது தன்னுடைய ஸ்வாதந்த்ர்யத்தினாலே யாகும். "நமக்கும் பூவின்மிசை நங்கைக்கு மின்பனே" என்றும் "கோலமலர்ப் பாவைக்கன்பாகிய வென்னன்பேயோ" என்றும் பேசி யுள்ளபடி பிராட்டியோடொக்கப் பரமபாகவதர்களையும் ஸ்நேஹிக்கும் எம்பெருமான் தன்னுடைய பொருள்களையெல்லாம் அந்தப் பரம பாகவதர்கள்தாம் இட்ட வழக்காம்படி ஸ்வஸ்வாமிபாவநிவ்ருத்தி பூர்வகமாக அவர்களின் ஸ்வம்மாகவே ஆக்கி வைக்கிறானென்பது ஶாஸ்த்ரஸித்தம். திருநாட்டை "வானவர் நாடு" என்று பேசும் படியாக்கி வைத்தான். தன்னை "வானிள வரசு" என்றும் பெரியாழ்வார் திருவாக்கினால் பேசுவித்தான். "பொன்னுல காளீரோ புவனி முழுதாளீரோ" என்கிறாராழ்வார். தமக்கு உரியதல்லாத பொருளையா தாம் வழங்குகிறார்? உபய விபூதியையும் ஆழ்வாருடைய ஸ்வம்மாக எம்பெருமான் ஆக்கிவைத்தருளியிருந்தாலல்லது இங்ஙனே பேச வொண்ணாதிறே. ஸ்வாமி தேசிகனும் "ददाति रङ्गी निजमपि पदं देशिकादेशकाङ्क्षी" என்றருளினர். இங்குள்ள ஸ்வாரஸ்யத்தை ரஸிகர்கள் அநுபவிக்க வேணும். "निजं पदम्" என்கையாலே மோக்ஷமென்னும் பொருள் இயற்கையாய் எம்பெருமானுடையதே என்று, காட்டப்பட்டது. அதை 'देशिकादेशकाङ्क्षी सन् ददाति' என்கையாலே, தன்னுடைய ஸ்வாதந்த்ர்யஸங்கோசவிஶேஷமடியாக அடியார்களிட்ட வழக்காகவும் அதனை ஆக்கி வைத்திருக்கிறானென்று காட்டப்பட்டது. ஆகவே ஸமவஸ்திதியில் பிராட்டிக்குள்ளதான உரிமை ஸூரயாதிகளுக்கும் ஸவிஶிஷ்டம் என்பது ஸுஜ்ஞாநம்.

இங்ஙனே நாம் நிஷ்கர்ஷிப்பது பரமோதாரனான எம்பெருமானுடைய விசாலமான திருவுள்ளத்தை அடியொற்றியே யாம். பகவத் கீதையில் (7—18) "ज्ञानी त्वात्मैव मे मतम्" என்ற விடத்தில் தாத்பர்ய சந்திரிகையில் ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்கிறார் காண்மின்—"ஸ்வயமபி ஆத்மலாபாயோ தவதா விநா. ஸ்ருஷ்டிலாபஸ்ய ஸம்பத்திஹேதவ:" இதி,

இந்த ஸ்ரீ ஸூக்தி ரஸத்தை அநுபவிப்பார் ஆர்கொல்! எம்பெரு மானுடைய திருவுள்ளத்தை நம் தேசிகன்போல்வாரன்றோ கண்ட றியவல்லார். சாஸ்த்ரமெல்லாம் ஒரு தட்டும் அவனது திருவுள் ளம் ஒரு தட்டுமாக இருக்கும். அதனை மருமமாகக் கண்டறிந்து நம் பெரியார்கள் பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே.

எம்பெருமான் தன்னுடைய விபூதிகளை ஸாஹித்யவஹா ... த்வைவ்ருத்தி விசேஷ ஸாக்ஷிகமாக ஆக்கி வைத்திருக்கிறானென்பதை பூர்வாசார்யர்கள் பாங்காகவே அறிந்துள்ளார்கள்.

இராமாநுச நூற்றந்தாதியில் "ஞானங் கனிந்த நலங்கொண்டு நாடொறும் நைபவர்க்கு வானங் கொடுப்பது மாதவன், வல்வினை யேன் மனத்தி லினங்கடிந்த விராமாநுசன் தன்னை யெய்தினர்க்கு அத்தானங் கொடுப்பது தன் தகவென்னும் சரண் கொடுத்தே." என்றொரு பாசுரமுள்ளது. மோக்ஷதாநாயிகாரம் எம்பெருமா னுக்குப் போலவே எம்பெருமானார்க்கு முள்ளதாக இதில் ஸ்பஷ்ட யக்தம். இங்ஙனே பல ஆசார்யர்களுக்கும் மோக்ஷ தாத்ருகவ உபயவிபூதி ஸாக்ஷிகம் முதலானவை தத்தத் ஸ்தோத்ராதிகளில் பேசப்பட்டே யுள்ளன. இவற்றை யடங்க ஆராயுமளவில் தாவ யித்ருகவிதா ... ப்ருதிவாதநத்திலே பர்யவஸித்து நிற்குமத னை யென்று கொள்ளவடுக்கும். ஸ்வஸு, மோக்ஷமென்னு பொருள் ஸ்ரீ ஸ்ரீமோஹயஸாக்ஷிக மென்பதைக் கொண்டு ஸ்ரீ மனுக்குப் போலவே ஸ்ரீக்கும் தத்தாநாயிகார முளதென் கூறவந்தது எவ்வளவு பயனுடைத் தென்பதை ப்ராஜ்ஞர்கள் ப சிலிப்பது.

மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை எம்பெருமான் தானே தனித்து கொடுத்துவிடுவதில்லை யென்றும், பிராட்டியின் நியமனத்தையு கொண்டே கொடுத்தருளுகிறானென்றும் சொல்லுகிற விதனி யாம் விப்ரதிபத்தியுடையோ மல்லோம். பிராட்டியின் நிய னத்தை யெதிர் பார்ப்பது போலவே ஆசார்யன் நியமனத்தையு எதிர்பார்த்தே தருகின்றானென்னுமிடம் "தேசிகாதேசகா..." என்கிற உதாஹ்ருதவசனத்ருஷ்டி ஸூக்தியினால் ஸ்பஷ்ட மாகின்றமையால் ஆசார்யனுக்கும் உபாயத்வம் கொள்ள என்ன குறை? ஒரு குறையு மில்லை யென்னில், பிராட்டிக்கும் இங்ஙனே கொள்ள ஒரு குறையுமில்லை யென்றே இசைகின்றோம்.

http://acharya.org

இந்த முதல் விஷயத்தை இப்போது இவ்வளவோடு நாம் நிறுத்திக்கொள்வது நன்று. இதில் தேசிகனுடைய திருவுள்ளம் எவ்வளவு அழகாக அமைந்திருக்கின்றது! என்பதை மாத்திரம் ஸாரதமமானதொரு ஸ்ரீ ஸூக்தியினால் சுருக்கமாக ரூதலித்து முடிக்கிறேன். ஆளவந்தாரருளிய சதுச்ச்லோகியில் மூன்றாவது ச்லோகத்தில் "ஶெ்ரயொ நஹ்யரவிநூவொவந உநஃகாஙா வுஸாஊாதுெத ஸஂஸாரதவுக்ஷுர வெ்வஷ்ணவாயுவஸ நராணாஂ ஸஂஹாவுெத கஹி்ஃவிக." என்ற விடத்திற்கு பாஷ்ய மருளிச் செய்யாநின்ற ஸ்ரீ தேசிகன் "ஶோக்ஷவுடெ ஹமவதி உஉ க்ஷணாஂ வடிக.தயா வஸஷா திஷ்தீதி ஸவஃ ஸஂ உதுழ; வஸிவணஃாநஹவவுஊாந ஸஂகவுஷ ஹம வதஃ ஷுஶெஸுவவா, ஸவதீகஸுவெதி யயாவுஊணஂ ஹவத; ஸவஃயா வெ்வஷ்ணவாயுஶெயஃ வுஷகவுழ கஷுா உஹொவுஊநஂ ந விராஜஃ" என்றருளிச் செய்துளர். இதில் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கு மது யாதெனில்; எம்பெருமான் தான் மோக்ஷ ப்ரதன். பிராட்டியோ வென்னில் புருஷகாரக்ருத்யம் செய்வதற்கு இருக்கின்றாள்; இதுதான் ஸர்வ ஸம்மதமான விஷயம். பரிபூர்ணநுபவத்தை யளிப்பதற்குறுப்பான ஸங்கல்பத்தை எம்பெருமான் தானே தனித்துச்செய்கிறானா அல்லது பிராட்டியுடன் கலந்து செய்கிறானா என்னும் விஷயம் சாஸ்த்ரம் சொல்லுகிற கட்டளையிலே நிர்ணீதமாயிடுக. அவ்விஷயம் எப்படி யிருந்தாலும், பிராட்டி புருஷகாரமாக லல்லது எம்பெருமான் பேறு பெறுவிக்கமாட்டா னென்பது ஸர்வஸம்மதமாதலால் முக்திமார்க்க ச்ரேயஸ்ஸு பிராட்டியினாலே யுண்டாவதாக இங்கு ஆளவந்தார் அருளிச்செய்ததில் விரோதமொன்றுமில்லை— என்பது மேலெடுத்துக் காட்டிய தேசிக ஸ்ரீ ஸூக்தியின் ஸ்வரஸமான பொருள்.

இந்த ஸ்ரீஸூக்தியில் "வஸிவணஃாநஹவவுஊாநஸஂகவுஷ ஹமவதஃ ஷுஶெஸுவவா ஷெவுா கவிவா" என்று கூட தேசிகன் விகல்பிக்கத் திருவுள்ளம் பற்றாமல் 'ஷுஶெஸுவவா ஸவதீகஸுவெதி யயாவுஊணஂ ஹவத" என்றே அருளிச்செய்துள்ளார். 'தாஷுஶஸஂகவுவதஂ ஷெவுா கவிவா' என்கிற வுஸஂமாதுமும் தேசிகனுக்கு

அஸஹ்யமென்பது இதில் தெற்றென விளங்கவில்லையா ? இப்படிப் பட்ட [illegible] தேசிகதிவ்ய ஸூக்திரத்னங்களை ஸேவித்திருக்கும் ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி ப்ரப்ருதிகளான மஹான்கள் இவற்றோடு பொருந்துமாறு பிராட்டிக்கு நிர்வஹிக்கவேண்டிய தான உபாயத்வத்தை நாமும் ஆதரிக்கக் கடமைப்பட்டே யிருக்கின்றோம. ஸ்ரீ குமார தேசிகனும் " [illegible] " என்றருளிச் செய்திருக்கக் காண்கிறோம். இதன் சுவையும் சீரியதேயாம்.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் ஸித்தோபாய சோதனத்தில்—" இப்படி ச்ருதி ஸ்ம்ருதி ஸம்ப்ரதாயம் நிற்கிற நிலைகளைக் கொண்டு ஸ்ரீ[illegible]த்திற் சொன்ன விசேஷணத்துக்கு [illegible]களுக்குப் போலே வஸ்துநாருபமான உபயோகவிசேஷங்களை ஸஹ்ருதயர் அறிந்து கொள்வது." என்றும், " [illegible] " என்றும் " ஆகையால் யதாவஸ்தானம் [illegible] விசேஷணமாக விசிஷ்டம் உபேயமானப் போலே விசிஷ்டம் உபாயமாகக் குறையில்லை " என்றும் அருளிச் செய்யப்பட்டது. இத்தகைய தேசிக திவ்யஸூக்திகளை ஸதாசார்ய ஸூக்தி[illegible]களில் பரக்க வெடுத்துக் காட்டி யிருக்கிறேனாகையால் இங்கு விரிவு சொல்ல விரும்புகின்றிலேன். இவ்வோ ஸ்ரீஸூக்திகளால் பிராட்டிக்கு என்ன [illegible] ஏற்படுகிறதோ அதை ப்ராமாணிகர்களான தேசிக பக்தர்களின் உள்ளம் அறிந்தே யிருக்கின்றது. அங்ஙனம் அவர்களின் உள்ளத்தில் [illegible]வாகப் பதிந்திருக்கின்ற [illegible]த்தை நாமும் [illegible]மாக இசைகின்றோமாதலால் இதில் விவாதம் வளர்ந்து செல்வது தகுதியற்றது.

ஸ்ரீ[illegible] [illegible] ஸ்ரீகோழியாலம்[illegible]

http://acharya.org

யதா ரக்ஷ்யா உபாயத்வே ஶாஸ்த்ரீயத்வாத்ந விஜ்ஞேயது |
விஶ்வாஸ்யதா யதிஷ்டாயம் ஸமேவஹ ஸ்வாநுயாயிபி: ||
ஸாராஸ்வாதிந்யபி ப்ரோக்தா ஸாக்ஷாத் ஸ்ரீதேஶிகஸ்வாமி
நாச |
ஸ்வாமிநாஸ்யேதயச தத்ஹி விஷ்ணோ வி நிரஸிதம் ஶக்த: |
யதி கோவிஶக்தோஸ்ய ப்ரவிஶேவ நஹி தவ வரம் ஜஹ்யா ||
இதிவத்திஶ்ரீதம் வ்யாக்தகவி விவயஷ்ஸோவ்யாயா
ஸேவ ||

இரண்டாவது விஷயம்—

ஸாராஸ்வாதிநீ பங்க்தி பரிசீலநம்.

இது முக்கியமான விஷயம். ஶாஸ்த்ரஜ்ஞர்கள் ஆழ்ந்து ஊன்றி நோக்கவேண்டிய விஷயம். ஆச்சான் பிள்ளையின் திவ்ய ஸ்ரீஸூக்தி ஸ்வஶாஸ்த்ரவிருத்தமென்றும், அதில் பிறர் ஏறிடும் அவத்யம் அஶாஸ்த்ரீயம் என்றும் நாம் வெகு விரிவாக நிரூபித்து முடித்திருக்கிறோம். அதன் மேல் ப்ரதி பக்ஷிகள் ஆகாஶதாண்டவமாகச் சில பேச்சுக்களை ஸமாதானம் போல் மூலைக்கு ஒருவராக எழுதி வெளியிட்டார்கள். அவர்களுடைய வாதத்தின் ஆர்ஜவத்தை ப்ராமாணிகர்கள் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஸ்ரீ தேசிக ஸூக்தி வித்தாஞ்ஜநத்தில் ஏழு வினாக்களடங்கிய ஒரு ப்ரச்ந பத்ரிகையை வெளியிட்டோம். ஒரு ஸம்வத்ஸரத்திற்கு இப்பால் அந்த ப்ரச்ந பத்ரிகைக்கு உத்தரம்போல் ரக்ஷா விமர்சத்தில் ஒரு அதிகாரம் வெளிவந்திருக்கின்றது. அதனை இங்கு ஆராய்வோம். அதில் (பக்கம் 37-ல்) "ப்ரதி பக்ஷியின் ஆக்ஷேபங்கள் ஏழுக்கும் ஸமாதானத்தை மாத்திரம் இவ்வதிகாரத்தில் ஸங்க்ரஹிக்கிறோம்" என்று தொடங்கி யெழுதியுள்ள விஷயங்களை ஒவ்வொன்றாக எடுத்து விசாரிக்கிறோம்.

1. ஆச்சான் பிள்ளையின்மீது கூறப்படும் தூஷணம் ஶப்தமொவரமா? அர்த்தமொவரமா? என்பது எமது முதற் கேள்வி.

http://acharya.org

"ஶப்தாநுஶாஸந ஶாஸ்த்ரம்" என்று இதற்கு உத்தரம் கூறியுள்ளார். இது பிசகு என்பது மேல் விஷய ஸோதநங்களி ஞல் விளங்கும்.

அத த்விதீயப்ரஶ்நோத்தரவிமர்ஶ: ॥

2. ஶப்தஶாஸ்த்ர மென்னில் ஸ்ரீமந்நாராயணசரணௌ என்கிற ப்ரயோகம் அஸாது வென்பதை ஶப்தஶாஸ்த்ரங் கொண்டு நிரூபிக்கவல்லீர்களா?" என்று எம்முடைய இரண்டாவது கேள்வி.

இதற்கு ப்ரதி பக்ஷி கூறியுள்ள உத்தரம் நேரன்று. ஸ்ரீமந்நாராயணசரணௌ என்கிற ப்ரயோகம் அஸாது வென்பதை ஶ்ரீமத்ரஹஸ்யா ஶப்தஶாஸ்த்ரத்தைக் கொண்டு நிரூபித்தா லொழிய விடை யிறுத்ததாகாது. அப்படிக்கு ஒரு ஶாஸ்த்ரம் உண்மையில் இருந்தாலன்றோ எடுத்துக் காட்டக்கூடும். இல்லாத வஸ்து எங்ஙனே வெளிவரும்.

வெறும் நாராயணனுக்கு சரணத்வயமே யானாலும் ஸ்ரீ விஶிஷ்ட நாராயணனுக்கு சரணத்வயஶாலித்வம் பொருந்தக் குறை என்னே? ஆளவந்தார் "த்வதேகஶாஸி ஸரஸிஜஜ்ஞயித: த்வத்பாதஸேவநம்" என்றருளிச் செய்திருப்பது ப்ரஸித்தம். "த்வதேகஶாஸிஸரஸிஜ: த்வத்பாதஸேவநம் என்று சொல்வதன்றோ பொருந்தும். ஸரஸிஜத்திற்கு பாதஸேவநமும் எங்ஙனே வரும்? என்று இவர்கள் ஆக்ஷேபிக்கக் கடமைப் பட்டவர்களே. கேவலஸரஸிஜத்திற்கு பாதஸேவநமே ஸம்பவிக்குமானாலும் ஸயித [ஸவ்ருத்திக] ஸரஸிஜத்திற்கு பாதஸேவநமும் ஸம்பவிக்கக் குறையில்லை என்றன்றோ ஆளவந்தார் திருவுள்ளம் பற்றினர். இங்கு பாஷ்யத்தில் நம் தேசிகன் 'ஔபாதிகாநுஶாஸீ ஶப்த: தத்ஸம்பந்தே கர்த்ருத்வ:" என்றருளிச் செய்தார். "நாராயணன் பிராட்டியாகிற தேவியோடு கூடி யிருந்தாலும் இவனே விசேஷ்ய பூதனாக நிற்பதால் அவன் பக்கலிலே சரணத்வயம் எப்படி அந்வயிக்கு"மென்று க்ஷேபிக்கு மவர்கள், "இங்கு ஸரஸிஜம் ஸயிதகேஶ உபாத்தமா யிருந்தாலும் ஸம்ஸ்ரீமஸரஸிஜமே விஶேஷ்யமாக நிற்பதால் அதிலே பாதஸேவநம் எப்படி அந்வயிக்கும்" என்றும் க்ஷேபிக்கக்

http://acharya.org

கொண்டு கிடக்கலாம். இப்படிப்பட்ட அவிவேகிகளின் ஶுஷ்க வாக்ய ஜாலங்களைப் பொருள்படுத்தி நாம் மறுப்புரைப்பது தகுதியே யன்று.

யதாபி ஸாஹஸ்ரதாரம்ஹந்த தோஷஶாஸ்த்ர்யம் பஶ்யேவ ந: |
ப்ரத்யுக்திரிதி ஸூக்தைத்ஸ்வயாயம் விவேகிபி:||

"விக்ரஹவாக்யத்தில் (ஶ்ரீமந்நாராயணஸ்ய) என்று ஏக வசநாந்தமாகவே சொல்லித் தீரவேண்டி யிருப்பதாலும் 'ஶ்ரீமந் நாராயணயோ:' என்று த்விவசநாந்தமாகச்சொல்ல ப்ரஸக்தியெஶ முமில்லாமையாலும், ஶ்ரீவிஶிஷ்ட நாராயணனுக்கு இரண்டு திருவடிக ளொழியப் பல திருவடிகள் அஸம்பாவிதமாகையாலும் (ஶ்ரீமந்நாராயண சரணௌ) என்று த்விவசநாந்தமான விக்ரஹம் ஸ்வரூபம் கஷ்டமேயாகும்" என்கிற இது ஒன்றே ப்ரதி பக்ஷியின் ஸமாதான ஸர்வஸ்வம். இது ஸவ்யபிசாரமென்பதற்கு ஒரு சிறிய திருஷ்டாந்தம் காட்டுகிறேன் காண்மின். வந்த்யா ஸுத:, ஶஶவிஷாணம், ககநாரவிந்தம் இத்யாதி பதங்களை யெடுத்துக்கொள்வோம்; மலடிக்கு மகன் இல்லை; முயலுக்குக் கொம்பு இல்லை; ஆகாசத்தில் தாமரை யில்லை. ஆனதாவதா மேற் கூறிய பதங்கள் கஷ்டங்கள் என்று ஶாப்திகர்கள் சொல்வ துண்டோ? ஸூத்ராவலிஙுகி, வ்யவஸாதஹதீதாத்ரி வாக்யங் களில் ஸூக்கு வெஸகாரணஸமும் வயஸ்ஸுக்கு தாஹகாரணஸ மும் ப்ரஸக்தமாகின்றது. வஸ்துத: இவை அஸம்பாவிதம்; கதவாவ இந்த வாக்யங்கள் ஸாபத்யகவாயுகங்களாம். ஆனாலும் அந்த வாக்யங்களுக்கு ஶப்தாஸாதுத்வத்தை ஒரு ஸாக்ஷராவும் கூறத் தகேப்படுவதில்லை. ஒரு சரணங்கூட இல்லாததொரு வஸ்துவுக்கு சரண மிருப்பதாக வைத்து ஒரு வடிவ்யொமம் ஒருவன் செய்வ தாக வைத்துக்கொள்வோம். [சரணவாநுதீவ: என்கிறானென்று கொள்வோம்.] இதில் என்ன வியாகரண தோஷம் சொல்ல முடி யும்? "கேயாபிராஸாதஹி" என்று ஒருவன் சொன்னால், கேயாபிரே ஸஸாரஹவ்யு கஸம்ஹாவிதகஷாக கவஶப்தாயம், என்று சொல்லக் கற்ற ஶாப்திகர்களை நாம் உலகிற் கண்டதில்லை. ஸஞ்சொரவேஷ்டார்ட்டனத்திற்கு ஶப்தஶாஸ்த்ரம் நியாமகம். அதி

http://acharya.org

னுள்ள ஸூத்ரவார்த்திககாரிகைகளைக் கொண்டோ தத்ஸூத்ர ஸாமா
ந்ய ஸூத்ர வ்யாக்யாநங்களைக் கொண்டோ ஸம்ஜ்ஞா
த்தை நிரூபிக்க வேண்டியிருக்க அம்மையார்கதைகளை யெழு
தியா கரணவ்யாக்யா ஸூத்ரங்களை உபதேசிப்பது.

*"ஸர்வேஷாம் ராஜா வர்த்ததே *என்கிற பிரயோகம் எப்
படி உசிதமோ அப்படியே *ஸ்ரீமந்நாராயண சரணௌ என்ப
தும் உசிதம்." என்று ஸாரஸ்வதாதிகாரர் எழுதியுள்ளார்.
(ஸர்வேஷாம் ராஜா வர்த்ததே) என்கிற ப்ரயோகம் உண்மையில்
உசிதமென்பது நிர்விவாதம். அதுவே [ஸர்வேஷாம் ராஜ்ஞ:
சரணௌ, சரணே சரணாநி] என்று எப்படியிருந்தாலும் இதில்
தோஷம் சொல்ல ஸர்வ ஶாஸ்த்ரம் சிறிதும் இடந்தாராது.

(ராஜாஸர்வேஷாம் ஆஸ) என்கிறப்போலே (ஸர்வேஷாம்
ராஜாஆஸ) என்று சொல்ல முடியாதன்றோ வென்று பிரதிபக்ஷி
எழுதுகிறார். இது ஸம்பந்த ஶப்த ஸாமர்த்ய ஸங்கம். (ஸ்ரீநாரா
யணஸ ஆஸ) என்கிறப்போலே (ஸ்ரீமாந் நாராயணோ ஆஸ)
என்றும் சொல்லலாமென்று இங்கே வாக்யார்த்த ஸம்பந்தமானால்
அப்போது சொல்ல வேண்டிய வார்த்தையிது. ஸமாநாதிகர
ணத்வமும் வ்யதிகரணத்வமும் என்னும் வாசியை ஏற்கனவே நாம்
கைகொள் கனியாக எடுத்துக்காட்டியிருந்தும் இன்னமும் இவர்
அதை க்ரஹிக்கவில்லை. (ஸ்ரீநாராயணயோ: ஆஸ்ரம்) என்பது
போல (ஸ்ரீமதோ நாராயணஸ்ய ஆஸ்ரம:) என்று சொல்லலாமா
கூடாதா? என்றாற்போன்ற விசாரமே இங்கு வேண்டும்.

ஸ்ரீதேசிகன் ந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் ஈச்வர பரிச்சேதத்
தில் "ஶ்ரியா ஸஹ ஸ்தித: ஸ்ரீமத்வம் ஶாஸ்த்ரம் ததவஸ்தம்"
என்றொரு காரிகை அருளிச்செய்திருப்பதை நாம் எடுத்துக்
காட்டி, உபயவிஶிஷ்டமான ஸ்ரீமத்த்வத்தை ஸஙவிஶிஷ்ட
வாதிஷ்டங்கள் இங்குக் கூறியிருக்கும் கணக்கிலே ஸ்ரீமதோ நாரா
யணஸ்ய சரணவர்த்திஷ்டய மென்கிற வ்யவஹாரமும் செவ்வியதே
என்று நிரூபித்திருக்க, அதைப்பற்றிச் சிறிதும் வாய்திறவாமலே
அவிமுக்த அவகுணம் செய்து போதுபோக்குமவர்கட்கு நாம்
என் சொல்வது? (ஶ்ரிய: ஸ்ரீஶரண்ய ஆஸ்ரம:) (ஸ்ரீ ஸ்ரீ
ஶயோபாஸ்ரம:). என்கிற பிரயோகங்கள்போலவே (ஶ்ரியா

http://acharya.org

ஸஹ ஹமவடெதாடிாஂவடிதூ)ஷ) என்கிற பிரயோகமும் ஸாஸாய
வே யென்று தேசிகன் திருவுள்ளம்பற்றி ப்ரயோகித்தும் காட்டி
யிருக்க, இன்னமும் இதில் டூஷணை முரைப்பவர்கள் ஸ்ரீதேசிக
திவ்ய ஸூக்திதூஷகர்களே யென்னத் தட்டுண்டோ ?

அன்றியும் அந்த தேசிக ப்ரயோகத்தைக் காட்டியே
வாக்யார்த்தம் நடத்தியிருக்கிற நம்மை நோக்கி இந்த ரக்ஷாவிமர்ச
கர்ரர் இதே இடத்தில் "உதாஹரணத்தினுல் ஸ்வாமிதாயம்
ஸம்யக் நம் கூறவஸ்ஜா தூ்யெநு யஷி ப்ரதாநதமம் மாகிறது"
என்று கூசாமல் எழுதி யுள்ளார்.

தேசிகனை ஜாத்யனென்று வசை கூறுமிவர் தேசிக
ஸ்ரீஸூக்தி ஸம் ரக்ஷகர்களில் தலை நிற்பவரே.

அத த்ருதீயப்ரச்னோத்தர பராமர்சம்ঃ.

இனி நமது ப்ரச்னபத்ரிகையில் மூன்ருவது கேள்வியா
தெனில்:—

"ஆச்சான் பிள்ளையின் மீது கூறப்படும் தூஷணம் அயுக்
தமாவது மென்னில், ஸாராஸ்வாதினீகாரர் (ஸாரோதெத்யா ராஜா
வடிதஃ) என்று கொண்டு ப்ரஸங்கம் பண்ணி யிருப்பதைத் திருக்
கார்த்திகைச் சொக்கப்பனையில் ஸமர்ப்பித்து விடுகிறீர்களா ?
என்பது.

இதற்கு உத்தர முரைக்கப் புகுந்த விவர்— "அயுக்தமாவது
மாவது" என்று தொடங்கி ஏதோ எழுதுகிருர். இது வினவுக்கு
ஏலாத விடை. "அயுக்தமாவது மென்னில் அதை நிரூபிக்க
வேணும்" என்று நாம் அபேக்ஷித்திருக்கவில்லை. (ஸாரோதெத்யா
ராஜா வடிதஃ) என்ற அபப்ரயோகத்தை ஸ்வீகரித்து
தூஷித்த ஸாராஸ்வாதினீகாரர்க்கு ஸ்ரீமந்நாராயண சரணாரு
என்பதில் மூடியொஷமொன்ருழிய வேருென்றும் விவக்ஷித
மில்லை; அந்த தோஷத்தைப்பற்றி இங்கு வாய்திறக்க வழியில்லை
யென்று தீர்ந்தபின்பு அந்த ஸாராஸ்வாதினியைச் சொக்கப் பனை
யில் ஸமர்ப்பித்தாயிற்று என்பதே தேறி நிற்கும். இங்கே இவர்
எழுதுகிருர் — ஸ்ரீமந்நாராயணயோஃ சரணாரு என்று விக்ர
ஹமா ? ஸ்ரீமந்நாராயணஸ்ய சரணாரு என்பதா ? குதெய்திவசு

http://acharya.org

நாமத்ராணயம் வாசிதம். த்விதீயே ஸஹஸ்ரநாமத்ராணயம் வாசிதம்” இதி ॥ கதோக்தே; ஸ்ரீமந்நாராயணயோ: என்பாரில்லை. ஸ்ரீமந்நாராயணஸ்ய! என்றே விக்ரஹிப்பது. அந்த நாராயணன் கேவலனன்றிக்கே ஸ்ரீமத்தந ஸந்நிதியனா யிருப்பதால் ஸமர்த்தமான வ்ருத்தி ஸித்திக்குக் குறையில்லை, ஸம்ஸ்த வரண ஸப்தாந்யாஸ்யம் ஸம்வாசிதம்.

ஸம்ஸ்கஹிதி, (ஸ்ரீமந்நாராயணோவக்த:) என்கிற ப்ரயோகமும் ஸாது வாகலாமே? ஸமர்த்தமான வ்ருத்திஸித்திக்கு இங்கும் குறையில்லையே ; என்பீர்கள்.

இது ஸமாநாதிகரணஸ்ய மாகையாலே இதற்குண்டான நியதியை மறந்து வ்யாஸ ஸமாஸநம் செய்ய வேண்டா என்போம்.

(ஸர்வாஸஹ நாராயண: வரண ஸப்தஷ்யாமி) என்பது எப்படி ஸந்தர்ப்யமோ அப்படியே (ஸ்ரீவிஸிஷ்ட நாராயண: வரண ஸப்தஷ்யாமி) என்பதும் ஸந்தர்ப்யம்; அப்படியே (ஸ்ரீமதா நாராயணஸ்ய வரணா: வசனா:) என்பதும் ஸந்தர்ப்யம் என்று ஸர்வஜ்ஞ ஸித்தஜ்ஞ ஸிததாந்தஸர்வஜ்ஞம். [ஜயதா ஹிஸ்ஸஹ ஸர்வஜ்ஞ: ஸ்ரீதாஸதாஸீமண:।] [ஸதயித: ஸர்வஜ்ஞ: ஸ்ரீதாஸதாஸீமண: [ஸதயிதஸ்ய ஸர்வஜ்ஞஸ்ய ஸ்ரீதாஸதாஸீமணக:—] இதி வாநஸம்ப்ரயம் ॥

ஆக்ஷேபகர்களை இன்னமும் ஒருவழியாலே தெளிவிக்கிறோம். (ஸேவேதோஸேதாஸ்ய ஸமதள) என்கிற ப்ரயோகம் ஸம்ப்ரதிபந்த மென்று நீங்களும் இசைகின்றீர்களிறே; இங்கு ஸமதள என்கிற விவவநாஸவதம் எந்த விவவநாஸவதத்தில் அந்வயிக்கிறது? முன்னே யுள்ள பதங்களோ தனித் தனி ஏக வசநாந்தங்கள். ஒரு பதம் ஒரு பதத்தோடு தானே அந்வயிக்கும். ஆகவே இங்கு த்விவசநம் அஸாது என்றே க்ஷேபிக்க இடமுண்டு. ஆனாலும், (ஸேவேதோஸேதாஸ்ய) என்றதற்குப் பிறகு (இதரேதர) என்று ஸமாஹாராத்யாஹாரம் அதில் (ஸமதள) என்பது அந்வயிக்கின்றதாகக் கொள்ளுகையாலே விரோதமில்லை என்னவேணும். மற்றும் சிலவகையான

நிர்வஹணங்களு மிருக்கலாம். எப்படி நிர்வஹித்தாலும் ஶர-ணாகதிஸ்வரூபஸங்க்ரஹவாக்யத்தில் விவக்ஷிதாநுரூப யோக்ய-மான விவக்ஷிதார்த்தம் இல்லாமையாலே வாக்ய காரர்கள் ப்ரயோகதோஷதுஷ்டர்களாகவே யிருக்கப் ப்ராப்தமாகும். அங்ஙனமே நீங்களுமிருக்கில் இருப்பது. ([illegible]) என்றாற் போன்ற விடங்களில் விவக்ஷிதத்திற்கு உபபத்திஸம்பாதகம் பகாரம் என்றே சொல்லித்தீர வேணும்; அப்படியே ஸ்ரீமந்நாராயண சரணௌ என்கிற விடத்தில் ஶரணஶப்தமத்-வாச்யத்வத்திற்கு உபபத்தி ஸம்பாதகம் மதுப்பு என்றுகொள்ள வேணும். ஆளவந்தாரும் தேசிகனும் காட்டியருளின வழியே நமக்குத் தஞ்சம்.

ஸஹஸ்ரபாஷ உதாஹரணங்கள் ஆவாதகர்க்குக் கனவிலும் விவக்ஷிதங்களல்ல. பிரதி பக்ஷிகளில் ஒருவர் அதனையெடுத்துப் பேசினர். அந்த ரீதியிலும் ஸமஞ்ஜஸமாகக் கூடியதான ப்ரயோகம் அயோக்ய மென்னத்தகாது என்பதே எமது வாதமாயிற்று. அது வேண்டா.

கிம் பஹுநா? (ஸ்ரீமந் நாராயண: உபாயதயா வரணீய:) என்றிருந்து, இங்கே "பிராட்டிக்கும் உபாயதயா வரணீயத்வ விவக்ஷையிருக்குமாகில் ஸ்ரீமந் நாராயணௌ உபாயதயா வரணீயௌ என்றிருக்க வேணும்" என்று ஆக்ஷேபம் செய்திருந்தால் அப்போது பேசவேண்டிய பேச்சை ஆக்ஷேபமே மருண்டு கலங்கி மயங்கிப் பேசி வைத்தீர்களென்பது ஒன்றே விஷயமானாலும் ஸஹஸ்ரமுகித்தாலும் கல்வெட்டாகத் தேறி நிற்கும்.

இங்கே இவர் ஸநாதீநாதி [illegible] வாமந ஸூத்ரத்தை அவவாதத்துடன், உதாஹரித்துள்ளார். ([illegible]) இந்த வாமந ஸூத்ரத்திற்கு விசேஷ்ய [illegible] தமா யிருக்குமிடத்தில் தவிர மற்ற இடத்தில் ஸ்மரண முண்டாகவும் ப்ரஸக்தி யில்லை யென்பது பண்டே பரக்க நிரூபிதம். ([illegible]) என்றாற் போன்ற இடங்களில் த்விவசநாந்தமாயிருந்தாலும் குறையில்லை என்று வாமநன் சொன்னானே யல்லது, வேறில்லை. இந்தச் சிறு விஷயத்தையும் க்ரஹிக்க இல்லாதவர் அந்தோ!

http://acharya.org

வ்யாவஸிஷ்யாத்³ இதி || த்வயத்திலுள்ள தான த்விவசநாந்தபதமும் பிராட்டியின் இரண்டு திருவடிகளையும் சேர்த்து நான்கு திருவடிகளையும் போதிக்க வல்லதாகும் என்பதை நிரூபிக்க அந்த வாமந ஸூத்ரம் சிறிதும் உபகரிக்க மாட்டாதென்பதைப் பரக்க உபபாதித்திருந்தும் அந்தோ தெளியகில்லீர்.

ஸ்ரீமந்நாராயண என்றிராமல் ஸ்ரீநாராயண என்று த்வந்த்வமாகை இருந்தால்தான் (சரணௌ) என்று பஹுவசநாந்தமாக இருக்கவேண்டுமென்று எழுதியிராநின்ற ஸாரஸ்வாதிநீகாராதிகள் அந்த வாமந ஸூத்ரத்தை நெஞ்சிலும் நினைத்திலர்—என்று நாம் பலகால் நிரூபித்திருப்பதற்கும் உத்தரமுரையாது விட்டிட்டீர். உங்கள் அபிப்ராயப்படிக்கு, ஸ்ரீமந்நாராயண என்று (மதுப்போடே கூடி) இருக்கும்போது சரணௌ என்கிற பஹுவசநம் துஷ்டம். ஸ்ரீ நாராயண என்று (மதுப்பின்றியே) இருக்கும்போது ஸ்தநாதீநாம் த்³வித்வ வாமந ஸூத்ரப்படி த்விவசநமேபோதும். ஸ்வஸ்ரு பஹுவசநத்திற்கு ஒருபோதும் அபேக்ஷையில்லை யென்று தேறி விட்டது. ஆகவே ஸாரஸ்வாதிநீகாராதிகள் பஹுவசநாஸ்ரயணம் பண்ணியிருக்கிறார்களே, அதுவன்றோ அவர்களுக்குள்ள வாமநஸூத்ராநபிஜ்ஞதையைப் புலப்படுத்துகின்றது. "உபயோஸ்ஸ்ரீ ப்ரயோஜ்யத்வ விவக்ஷாயாமேவ பஹுவசநம் ப்ராப்தமிதி" என்று ஸாரஸ்வாதிநீகாரரும் தர்ப்பணகாரரும் எழுதியிருப்பது மறைக்கவொண்ணாதது. "உபயோஸ்ஸ்ரீ ப்ரயோஜ்யத்வ விவக்ஷாயாமபி ந பஹுவசநப்ராப்திஸ் ஸம்பவதி; * ஸ்தநாதீநாம் த்³வித்வ ஸூத்ரஸ்ய ஜாகரூகத்வாத். த்விவசநேநைவ விவக்ஷிதார்த்த ஸித்தே:" என்றன்றோ அவர்கள் எழுதியிருக்க வேண்டும். அங்ஙனே யெழுதியிராமையோடு விபரீதமாகவும் எழுதியுள்ள அவர்களுக்கு வாமந ஸூத்ராநபிஜ்ஞதாவாதம் ஸுகலஸ்ஸாயியே.

அத² பஞ்சமஸ்ய ப்ரத்யுத்தரவிசேஷ:.

4. "ஸர்வத்ரோபயத்ர ஸம்ப³ந்தி³ஸங்க்³ரஹணார்த²ம் ப்ரயோஜ்யாந்தராநா ஸாபிகாசஸ்வாமாந்யராஜஸுகு த³ர்ஶனீய ப்ரயோக³: ந து ப³ஹுத்வ இதி" என்று ஸாரஸ்வாதிநீகாரர் எழுதியிருப்பது பல படியாலும் அபஹாஸ்யம் என்பதை ஆசார்ய ஸூக்திரக்ஷையில் மிக விவரித்திருக்கின்றோம். கடைசியாக

http://acharya.org

இதன்மேல் நாம் கேட்டிருக்கும் கேள்வியாவது—"ஸமஸ்யமா நேத்யாதி வாக்யத்திற்கு ப்ரக்ருதோபயோகம் சிறிதேனுமுண்டோ? உண்டாகில், ஸ்ரீமந்நாராயண சப்தாவித்ருத்த ஸம்ஸ்காரோ நவதாயகமும் எது? தத்ஸம்பந்திகளான லிங்கமும் வசநமும் எவை? வ்யாகரணம் எது? தந்தாரதந்த்ரஸாரித்வம் கீத்ருசம்? அதயாகேவ வரும் பாதகம் என்ன?" என்பதே. இதற்கு விமர்சகாரர் எழுதியுள்ள விடையை விமர்சிப்போம். ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி ஸம்ஸ்காரோ நவஸூத்ரத்யநிஷேதகம் மென்றொரு க்ரந்தம் அருளிச் செய்திருப்பதாகவும் அதில் விரிவாகக் காணலாமென்றும் இவர் நிமதித்துள்ளார். அந்த க்ரந்தம் அவதரித்த அன்றைக்கே நம் பக்கல் வந்து ப்ரத்யாக்யாதமாகி மீண்டதென்பதை இவர்தாம் அறிந்து வைத்தும் அறியாதார்போலெழுதுவது வியப்பே. அவ்விரண்டு க்ரந்தங்களையும் வித்வான்கள் விரைவில் காண நேரவேணும். அது நிற்க.

இப்போது இவருடைய விடையிலுள்ள அஸாமஞ்ஜஸ்யத்தை மாத்திரம் நிரூபிக்கிறோம். "ஸர்வஸிம்ஹம் ஸம்ஸக்த த்வராஷயோ:" என்கிற ஸூத்ரத்தின் வியாக்கியானத்தில்—இத்யாதியாக இவர் எழுதியிருப்பதைப் பற்றி இங்கு ஆராய்தல் அநபேக்ஷிதம். பால மநோரமா பங்க்தியைக் கொண்டு இவர் ஏதோ எழுதுகிறார். அந்த ஸூத்ரம் மஹாபாஷ்யத்தில் ப்ரத்யாக்யாதம். ஆனாலும் ப்ராசீனவாதமென்கிறார் தத்வபோதினீகாரர். இங்கு இந்த விசாரத்திலே புகுந்தால் விரிவு பெரிதாகும். ப்ரக்ருதத்தில் நமது வினாவுக்கு இவர் எழுதியுள்ள விடையை மாத்திரம் நிரஸிக்கிறோம்.

"ப்ரக்ருதத்தில் ஸ்ரீமந்நாராயணஸ்ய சரணௌ என்கிற விக்ரஹத்தில் ஸம்ஸ்காரோ நவதாயக: ஸ்ரீமந்நாராயண:; தத்ஸம்பிவஸநம் ஸமக்ஷஸம்ஸ்க்ருதம். இது வ்யாகரணஸம்மத நாராயணஸ்ராவணீய முள்ளது. ந த்வ்யாகரணஸம்மத ஸ்ரீவதாயகநாசம ஸாரீதீ" என்பது இவருடைய விடை. இதனால் ஸாராஸ்வாதினீகாரரை இவர் எப்படி ரக்ஷித்ததாயிற்று? ஸ்ரீமந்நாராயண: என்று ப்ரயோகிக்கலாமே யல்லாது ஸ்ரீமதஸம்ஸ்க்ருதையையும் விவக்ஷித்து ஸ்ரீமந்நாராயணன் என்று ப்ரயோகிக்க லாகாது என்றே இவருடைய உபபாதநத்தாலும் முடிந்து நின்றது. இது

3

http://acharya.org

நாமும் இசைந்ததே. ஸ்ரீமந்நாராயணௌ. என்று சொல்லலா மென்று யாரும் வாதிக்கவில்லை. அதற்கு அடுத்தபடி யுள்ளதான சரண பதத்தில் என்ன வசந மிருக்கவேணும்? என்கிற விசாரத்திற்கு இதில் ஸம்பந்த லேசமும் இல்லையாயிற்று. விக்ரஹத்தில் ஶ்ரீமந்நாராயணஸ்ய என்று ஏக வசநாந்த நிர்தேசமே ஸாது என்பதை யாரும் மறுத்திலராதலால், ஷஷ்டீதத்புருஷ ஸமாஸத்தை ஸஹஸ்ராநநேத்யாதியால் வெகு ஸம்ப்ரமத்துடன் ஸாதித்தது அபூர்வ பாண்டித்யமே. அன்றியும், “ஶரணம் யதீந்த்ர சரணம் வ்ருணீமஹே” என்கிற யதிராஜ ஸப்ததி ப்ரயோகம் அஸாது என்றும் இவர் நிரூபித்து நின்றாராகிறார்.

எங்ஙனே யென்னில் ஒரு வ்யக்திக்கு எத்தனை சரணம் ஸம்பாவிதமோ அவ்வளவைச் சொல்லுவது பொருந்துமேயன்றி மற்றைப்படியாகச் சொல்வது பொருந்தாதென்றல்லவோ இவர் நிஷ்கர்ஷிக்கிறார். “ஶ்ரீவிஷ்ணுலக்ஷ்மணயோகிநஃ பதயுக்மம்” என்று போற்றப்பட்ட யதிராஜர்க்கு உள்ளவை இரண்டு திருவடிகளாயிருக்க ஒன்றே யுள்ளது போல் ஏகவசநாந்தமாக ஸ்வாமி பணித்தது இவர்க்கு தூஷணீயமே யன்றோ. ‘உள்ளதைக் குறைத்துக் கூறினும் கூறலாம்; அதிகப்படுத்திக் கூறலாகாது” என்னப் பார்ப்பர். இங்ஙனே எந்த ஶாஸ்த்ரகாரர் நியமித்துள்ளார்? ஸுஷ்டு தாவதயம் விசாரஃ. ஸஹஸ்ராநநேத்யாதியால் சரணபதம் கிம்வசநாந்தமாக இருக்கவேணுமென்பதைப்பற்றியாதொன்றும் பேசப்படவில்லை யென்பதை இவர் தாமே அழகாகக் காட்டிவிட்டாராதலால் விடை அஸமஞ்ஜஸமென்று விளங்கிகின்றது.

இந்த அஸாமஞ்ஜஸ்யத்தை இவர் தாமே தெரிந்துகொண்டு, “வஸ்து தத்த்வ” என்று தொடங்கி வேறொரு புதிய வழியில் புகப் பார்க்கிறார். எந்த வழியில் நுழைந்தாலும் உய்ய விரகில்லை யென்பதையே சிக்கன வுணர்த்துகின்றோம். ஸஹஸ்ராநநஶேஷாய ஸம்பந்திலிங்க வசநாநாம் என்பதை (ஸம்பந்திகளான லிங்க வசநங்களென்று) ஸமாநாதிகரணமாக அந்வயித்தார் முன்னம். இப்போது, ஸஹஸ்ராநநஶேஷாய ஸம்பந்திநாம் யாநி லிங்கவசநாநி, தேஷாம் என்று வ்யதிகரணமாக அந்வயிக்கிறார் என்பதே வாசி. இப்போது, ஸஹஸ்ராநநஶேஷஸ்ய ஶ்ரீமந்நாராயணஸ்ய, தத்ஸம்பந்தி சரணபதம்; அதனுடைய லிங்கமும் வசநமும்

http://acharya.org

வ்யாநோத்தாநஸாரியா யிருக்கவேணும்—விசேஷ்யஸமித நாராயணபதத்தின் லிங்கமும் வசநமும் எப்படிப்பட்டதோ அப்படிப்பட்டதாகவே யிருக்கவேணும் என்றதாக ஆகிறது. ப்ரஸித்தமாகவுள்ள உபயஹேஸ்ரீரம் பிசகு என்றதாக முடிந்தது. வரணபதத்தின் வசனம் ப்ரதாநமான நாராயண பதத்தின் ஏக வசநத்தை அநுஸரித்திராமல் த்விவசநமாக இருக்கின்றதன்றோ.

மேலும், இந்த நியாயத்திற்கு (ஸவத்ரீகொராஜா ஊரஷ ஃ) இத்யாதி ஸ்தலங்களில் ஸமந்வயமென்றே பிரதிபக்ஷி தாமும் உபபாதிக்கிறார். இது நன்றே. வட்ுகாஷ்ுரஃவாஹாத மென்றாப் போல் ஸாமாநாதிகரணஸூத்தில் தான் ஸமந்வயம் காட்ட முடியும். அதற்காக நியமசிக்ஷை பண்ணிற் றென்றாலும் இதில் நாம் போராட அவசியமில்லை. வ்யதிகரணஸூத்திலும் இதுவே நியாயமென்னில், ஒரு ஶாஸ்த்ரஜ்ஞரும் இசையார். இசைந்தால் பல வகையான க்லேஶங்கள் நேரும். ஸஊஷ்ணோநவதாயக ஸம்பந்தியினுடைய லிங்கமும் வசனமும் வ்யாநோத்தை அநுஸரித்திருக்க வேணுமென்றதை வ்யதிகரணஸ்தலங்களில் ஸமந்வயப்படுத்திக் காட்டவே முடியாது. ஸ்ரீமந்நாராயணஸ்ய வாசகே என்பது ஸாதுவானப்ரயோகம். இதனை, அவப்ரயோக மென்ன வேண்டி வருகிறது. ஸஊஷ்ணோநவதாயக ஸம்பந்தியான வாசகாவதத்தின் லிங்கமும் வேறு. வசனமும் வேறு. ஆகவே வ்யாநோத்தாநஸாரிக்வம் வரவில்லை.

இங்கு பிரதிபக்ஷியின் வாத மென்னவென்றால், வ்யாநோத்தாநஸாரிக்வ மென்பவருடைய கருத்து- ப்ரதாநத்தின் வசனமேயாக வேணுமென்பதன்று; ப்ரகாநத்தில் மாத்திரம் உள்ள உறுப்புகளைச் சொல்லவேண்டும்போது எந்த வசனத்தினால் சொல்லவேண்டியதாகுமோ அந்த வசனத்தினாலேயே சொல்ல வேண்டுமென்பதாம்; நாராயணஸ்ய வரணௌ என்று சொல்ல ப்ரஸக்தியில்லை; அதுபோலவே தான் ஸ்ரீமந்நாராயணஸ்ய வரணௌ என்று சொல்லவும் கூடாது. என்று சிக்ஷிப்பதே கருத்து—என்று.

இது ஸமஞ்ஜஸமன்று. வக்தாவுக்கு இங்ஙனே விவக்ஷையாகில் வசநத்தோடு லிங்கத்தை உடன் சேர்த்திருக்கவே மாட்

டார். வசநத்தோடு லிங்கத்தை உடன் சேர்க்கவேண்டிய ஆவஶ்யகதை வ்யாகரணஜ்ஞர்க்குப்போலே ஸாரஸ்வாதி நீகாரர்க்கு இல்லையிறே. வசனத்திற்கு ஓரிடத்தில் ஸமந்வயம், லிங்கத்திற்கு மற்றோரிடத்தில் ஸமந்வயம் என்றுசொல்லப் பார்ப்பதும் தகுதியற்றது. லிங்கவசநாதிகளெல்லாவற்றுக்கும் ஸமாநாதிகரண ஸ்தலங்களிலே அழகாக ஸமந்வயம் ப்ராப்தமாகிறபடியாலும், வ்யதிகரண ஸ்தலத்திலே இங்ஙனம் நியமிக்கவ்யாமாணலேஶமு மில்லாமையாலும் இதற்கு வ்யாகரணவிரோதம் சிறிதுமில்லையென்று தெளிவது.

குரோஸ்ஸதாரஸ்ய நிபீட்ய பாதௌ என்ற ரகுவம்ஶ ஶ்லோகம் ஒருகாலும் வ்யவஸ்தாபகமாகாது. அங்கே குருவின் பதவிணையை மாத்திரமே விவக்ஷித்து த்விவசந ப்ரயோகம் பண்ணினபடி. குரு பத்நியின் பாதங்களையும் விவக்ஷித்ததுண்டு என்று கொண்டாலும், ஸஹார்த்தவசநாத் ப்ரயோகத்தின் ஸாமர்த்யத்தை இது ஒருகாலும் காட்டமாட்டாது. "ஸஜநௌ மாவிதௌ" என்கிற பிரயோகத்தைப் பார்த்துவிட்டு ஸஹயார்த்த வசநமே வழி தான் என்றும் ஆத்மநேபதம் தோஷ மென்றும் கொள்வது கூடுமோ? நநு த்விவசநமும் ஸஹார்த்தவசநமுமாகிய இரண்டும் உபபந்நமாவதாக இருக்கும்போது, இருக்கின்ற த்விவசநத்தைத் தள்ளி ஸஹார்த்தவசநவாதம் பண்ணுவானேன்? என்னில்: இதற்கு ஸித்தாஞ்ஜநத்திலே மிக விஶதமாக விடையளித்தோம். ஸ்ரீமந்நாராயண சரணௌ என்கிற ஸஹார்த்தவசநாத் ப்ரயோகத்தின் ஸாமர்த்ய விஷயமொன்று தவிர மற்ற ஒரு விஷயமும் ப்ரஸங்கிக்கத் தக்கதன்று. ஸாமர்த்ய நிரூபகமாக ஸாரஸ்வாதிநீகாரர் சிக்ஷித்த நியாயம் ஸாதிஶயஸ்வஸஹாய மென்று ஸ்வீகரிப்பதே ப்ரதி பக்ஷிகளின் ப்ரயாஸத்திற்குப் பலனாய் முடிகின்றது.

ஸநாதீநாதிஸூத்ராதி வாமநஸூத்ரத்தின்படி ராமேக்ஷண ஸஹித ஶத்ருக்நஸ்ய சரணௌ என்கிற பிரயோகமும் ஸாதுவென்றே தேறுகிறது. ஸர்வேஷ்வேகஶேஷாதி நியமத்தின்படி இது அஸாதுவேயாக வேணும். இங்கு ராமாதிகள் நால்வருமே ப்ரதாநர்களாதலால் அத்தனை பேர்களுக்கும் இருக்கக்கூடிய சரணங்கள்

http://acharya.org

இரண்டன்றே. வ்யுத்பத்தி ஸித்தமாகவா ஒரு
நியமம் சிக்ஷிப்பது? (நாராயணஸ்ய சரணௌ) என்று ப்ர
யோகிக்க வொண்ணாதாப்போலே (ஸ்ரீமந்நாராயணஸ்ய
சரணௌ) என்றும் பிரயோகிக்க வொண்ணாது என்று தெரி
விப்பதற்காகவே பகவத்பாஷ்யகாரஸ்ய த்ருஷ்டியை ஸாராஸ்வாதி
நீ காரர் காட்டினார் என்றதும் ஸமீசீநமான த்ருஷ்டாந்தமாம்.
தம்ஸத்தைத்தை அவர் தாம் வெளியிட்டுக் கொண்டது உண்மையே.
அது இல்லையென்று நாம் சொல்லிற்றிலமே. பகவத்பாஷ்யகாரஸ்ய
நிவேஶ்யவாசாந் என்கிற ப்ரயோகத்தை எந்த ஶாஸ்த்ரம் தடுக்
கின்றது? என்று வினவினதற்கு வாய்திறவாதே வலித
ஸமர்த்தனம் பண்ணுவதில் யாது பயன். [வத்ஸஸ்ய ஶ்ரீமதஸ்ஸம் பன்மவர
வணுஷழ; மொ ஶ்ரீமதஸ்ஸம் பன்மவர ஶஸஷழ | ஸவத்ஸாயா: மொ:
ஶ்ரீமதஸ்ஸம் பன்மவரவணுஶஸஷழ] என்னுமிந்த வ்யவஹாரத்தில்
யாருக்காவது விப்ரதிபத்தி உண்டோ? முந்துறமுன்ன மெடுத்
துக்காட்டிய ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியை ஒருகாலும்மறவேல்மின்.

"ஸுகுணவிஶிஷ்டாநாம் ஸம்ஸ்ருஷ்டாநாம் ஸமஸ்தப்ரவ்ருத்தி வாகவச
நம் நவஸ்யா" என்கிற காரிகா தர்ப்பண வாக்யத்தை மீண்டும்
எடுத்துக் காட்டுகிற நிர்ப்பந்தத்தை விஸ்மயநீயமே. அதுவோ
ஸமாநாதி கரணஸ்தலம். அங்கு ஏகவசநம் தவிர வேறொரு வச
நம் புகுரப்ரஸக்தியே கிடையாதென்பது ஸர்வஸம்ப்ரதிபந்நம்.
அங்கே ஆபத்திகாட்டுவது அவிவேக பரம காஷ்டையன்றோ.

வ்யாஸஸூத்ர ப்ரஸ்தாவஸமாப்தியில்—"ஆகையால் ஸ்ரீம
ந்நாராயண சரணௌ, ஸ்ரீமந்நாராயண பாதௌ இத்யாதி ப்ர
யோகங்கள் ஸ்வரஸங்களே" என்று ப்ரதிபக்ஷி யெழுதியுள்ளார்.
அவற்றில் அஸ்வாரஸ்ய ஶங்கை யார்க்கும் உதித்ததில்லை. நிரூபிக்க
வேண்டிய விஷயம் இன்னதென்றுகூட அறிந்து கொள்ளாமல்
க்ரந்தம் எழுதப்புகுந்தது தான் ஆச்சரியம். நநு, ஸமஸ்தோ
பாத்யாதி நியமஶரீரத்தைக் கொண்டு அந்த ப்ரயோகங்க
ளுக்கு ஸ்வாரஸ்யஸ்வாபாதகம் பண்ணியிருந்ததனால் அங்ஙனே
யெழுதினேனென்னில்; கேண்மின்; ஸமஸ்தோபாத்யாயத்தில்
ஸம்பந்தித்தவைகள் என்னும்போது, ஸாமாநாதிகரண்யஸ
ஸம்பந்திக்குமவற்றைப் போலவே வையதிகரண்ய ஸம்பந்

http://acharya.org

திக்கு மவற்றையும் ஸ்வீகரிப்பதானால் உலகிலுள்ள ஸாது ப்ரயோகங்களெல்லாம் அஸாது ப்ரயோகங்களேயாக வேண்டி வருமென்பதில் ஸந்தேஹ லேசமும் வேண்டா. (ஸபத்நீக ப்ராஹ்மணாக்நிஹோத்ராதி) (ஸோதக ப்ரஹ்ம ஷட்க:) என்பன போன்ற பிரயோகங்களெல்லாம் உதாஹ்ருதங்களாகுமல்லவா? ஸமஸ்யமாநவசநாய ப்ரஶ்ந:- தத்ஸம்பந்தி-தஸ்யோத்தரவசநம். அதில் ப்ரதாந ஸாத்ராநுஸாரியான லிங்கமுமில்லை, வசனமுமில்லை. ஆகவே அவை அஸாது ப்ரயோகங்களே என்றல்லவோ முடிக்க வேணும். "அபூர்வ வ்யுத்பத்தி விலஸிதம்" என்றெழுதிவிட்டதனாலே என்ன லாபம் பெறலாகும். அநுபஹதமான அவ்யுத்பத்தியிற் காட்டிலும் அவ்வ்யுத்பத்தியே நன்றுகிடீர்.

அத பஞ்சமப்ரஶ்நோத்தரவிமர்ஶ: ||

5. * ஸமஸ்யமானே த்யாதி வாக்யத்தில் வசனத்தோடுகூட லிங்கமுமொன்று கிடக்கிறதே, அதற்கும் சேர ப்ரக்ருதத்தில் ஸமந்வயம் பண்ணிக்காட்டுவீர்களா? என்பது ஐந்தாவது கேள்வி. இதற்கு விடையளிக்கப் புகுந்தவர் "லிங்கஸாமாந்யத்துக்கும் ப்ரக்ருதத்தில் ஸமந்வயமுண்டு" என்று தொடங்கி ஜாரசோராதிவாக்யம் போல் சில எழுதிவிட்டு அதில் தாமே அத்ருப்தி யடைந்து "லிங்கபதோபாதாநத்துக்கு ப்ரக்ருதோபயோகம் இராமற் போனாலும் (ஸபத்நீகோ ஜுஹுயாத்) இத்யாதிஸ்தலாந்தரத்தில் உபயோகம்" என்றெழுதப் புகுந்தார். எத்தனைபோது சுற்றிச்சுழன்று திரிந்தாலும் ஸமாநாதிகரண ஸ்தலமொழிய வேறுபுகலில்லையென்பதையே காட்டுகின்றாரிவர். இங்கே மற்றுமுள்ள வார்த்தைகள் அத்யந்த நீரஸங்களாகையால் உபேக்ஷிக்கப்பட்டன. இவருடைய சாஸ்த்ரஜ்ஞானம் மிகவும் விலக்ஷண மென்பதே கைமேற் கனியாகின்றது. இதனை இன்னமும் விவரிக்க அவகாசம் நேரும்போது தவறாது விவரிப்போம்.

அத ஷஷ்டப்ரஶ்நோத்தரவிமர்ஶ:.

6. இந்த வினாவிடையில் "ஸதாசாரணை ஶாஸ்த்ரவத்துக்கு இரண்டே சரணங்கள் என்கிற நியமம் உண்டு" என்று இவர்

http://acharya.org

எழுதவந்தது அவஹாஸ்யம். தொடைக்குக்கீழ் உறுப்பில்லாத மனைவியோடுகூடிய புருஷனைப் பற்றியே இவர் எழுதுகின்றார்போலும். மனைவியும் தாளிணையோடு கூடியவளாயின் ஸஹாஸ்ர புருஷரணவதஷட்யம்சாம் என்றே சொல்ல ப்ராப்தமாகும். இங்கே மற்ற விஷயங்களை மிகவும் அநாவச்யகமென்று உபேக்ஷித்தோம்.

அத ஸப்தமப்ரச்நோத்தர விமர்ச:॥

7. ஸ்நாநாதி கர்மயோக்யதைக்குரிய நியமங்களும் க்ரியாகர்மயோக்யதைக்குரிய நியமங்களும் ஸித்தஸித்தங்களென்றும் ஒன்றுக்குரிய நியமத்தைக்கொண்டு மற்றொன்றை உபபாதிக்கலாகாதென்றும் நாம் நிஷ்கர்ஷமாகத் தெரிவிப்பதை மறுக்க உங்களுக்கு ப்ரமாணலேசம் மேனும் உண்டா? என்பது எமது ஏழாவது கேள்வி. இதற்கு இவருடைய பதிலாவது—"நாம் நிஷ்கர்ஷமாகத் தெரிவிப்பதை மறுக்க ப்ரமாணலேசமும் இவருக்கு உண்டோ?" என்பதே. இவர் தெரிவித்ததெல்லாம் சாஸ்த்ரஜ்ஞ மொஹீ பஹிஷ்கங்களென்பதை நாம் இதுவரையில் ஸப்ரமாண பூர்த்திகமாக நிரூபித்துக் காட்டினோமென்பதை நிஷ்பக்ஷபாதர்களான வித்வான்கள் அறியவல்லார்கள், இத்யலம்॥.

சாஸ்த்ரார்த்தாஸ் ஸந்தி நாநா ஹாநோபாதாநதர்சிதா:
ஸாரமர்த்தாஹரிஹ ந்யாய வித்வத்பி: ப்ராமாணிகைர்நவா।
பரிபந்தாவிநிர்த்திஷ்டவ்யஸநிதா கர்மணா கைசித்வீஹ்யதி
வ்யாக்யா ஸகல சாஸ்த்ரஸ்ய ஸாவதாநமிஹ ஸ்வயம் ப்ரவ்யாஹ்ருதே॥

கவிதார்க்கிக கேஸரீ ஸம்ருத்திதே:
ஸததாநந்த ஹவிஷே ஸூரி ஹ்ருதயே வாக் ।
அதயா வியத்ர ஸிவாஜ்ஞீஸதோ:
நக்ஷத்ரவ்யூஹ ஹிதி தேவதி ஹவி॥

இதிவர வாதிபயங்கரவம்சயாண்ணம
ராயஸம்மயிதா ।
ரக்ஷாவிமர்சசிக்ஷா ஜீயாதாசந்த்ர
தாரகம் ஜகதி ॥

ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய ரக்ஷா விமர்சசிக்ஷை முற்றிற்று.

http://acharya.org